சுருக்கம்

நிர்வாகம் – செய்தி மக்கள் தொடர்புத்துறை – முதலமைச்சர் பொது நிவாரண நிதி – கொரோனா வைரஸ் நோய் தொற்று (COVID–19) குறித்து உண்மையான செய்திகளை சேகரித்து வழங்கிடும் பத்திரிகை மற்றும் ஊடகத்துறையில் பணிபுரியும் அரசு அங்கீகார அட்டை / செய்தியாளர் அட்டை / மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை பெற்ற செய்தியாளர்கள் அப்பணியின்போது கொரோனா வைரஸ் நோய் தொற்றால் உயிரிழக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வரும் இழப்பீடு தொகை ரூ.5,00,000/–ஐ ரூ.10,00,000/–ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த்துறை

அரசாணை (நிலை) எண். 53 | நாள்: 31.05.2021.
திருவள்ளுவர் ஆண்டு 2052,
பிலவ வருடம், வைகாசி 17 –ம் நாள்
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.52, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்.4)த் துறை நாள் 24.4.2020

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 26.5.2021ம் நாளிட்ட அறிவிப்பு (செய்தி வெளியீடு எண்.155)

***

**ஆணை:-**

மேலே பார்வை 2ல் படிக்கப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பில், தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று (COVID–19) தடுப்பு நடவடிக்கை குறித்து உண்மையான செய்திகளை சேகரித்து வழங்கிடும் பத்திரிகை மற்றும் ஊடகத்துறையில் பணிபுரியும் அரசு அங்கீகார அட்டை / செய்தியாளர் அட்டை / மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை பெற்ற செய்தியாளர்கள் அப்பணியின் போது கொரோனா வைரஸ் நோய் தொற்றால் உயிரிழக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாராருக்கு வழங்கப்பட்டுவரும் அரசின் இழப்பீட்டு தொகை ரூ.5,00,000/- லிருந்து ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

2. கொரோனா வைரஸ் நோய் தொற்று (COVID–19) உலக மக்களை தாக்கி அச்சுறுத்தி வருகின்றது. உலக நாடுகள் அனைத்தும் இந்நோய் தொற்றுதலுக்கு ஆளாகி பல்வேறு விதமான பேரிழப்புகளை எதிர்கொண்டு வருகின்றன. தமிழக மக்களை இந்நோய் தொற்றிலிருந்து பாதுகாத்து பேரிழப்புகளை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு சிறப்பாக எடுத்து வருகின்றது.

3. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் களப்பணி ஆற்றி அன்றாடம் இந்நோய்த் தொற்றிலிருந்து பொது மக்களை பாதுகாத்து வரும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

4. அரசு மேற்கொண்டு வரும் இந்நோய்த் தொற்று குறித்த விழிப்புணர்வு, முன்னெச்சரிக்கை, சுய கட்டுப்பாடுகள், அத்தியாவசிய தேவைகள், நிவாரணம் மற்றும் ஊக்கத் தொகை உதவிகள், மருத்துவ உதவிகள் ஆகியவற்றை அரசின் செய்திகளாகவும்,

... 2

குறிப்புகளாகவும், புகைப்படங்களாகவும் மற்றும் விளம்பரங்களாகவும் மிகுந்த கட்டுப்பாட்டுடன் பொது மக்களுக்கு ஊடகங்கள் வாயிலாக கொண்டு சேர்க்கும் பணிகளை ஊடகப்பிரதிநிதிகள் செய்து வருகிறார்கள். பத்திரிகையாளர்கள்/ஊடகப்பிரதிநிதிகள் அப்பணியின் போது கொரோனா நோய்த் தொற்று ஏதேனும் ஏற்பட்டால் அவர்களுக்கான முழு மருத்துவ செலவையும் அரசே ஏற்கும் என்றும் மேலும் இந்நோய்த் தொற்றினால் அவர்களுக்கு உயிரிழப்பு ஏதும் நேரிட்டால் அவர்களது குடும்பத்தாருக்கு அரசின் இழப்பிட்டு தொகையாக ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிவாரண தொகை வழங்க பார்வை 1ல் கண்ட அரசாணை (நிலை) எண்.52, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்.4)த் துறை, நாள் 24.4.2020 மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. பத்திரிகை மற்றும் ஊடகத் துறையில் பணிபுரியும் அரசு அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள் கொரோனா நோய்த் தொற்று காரணமாக இறக்க நேரிட்டால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) இழப்பீட்டுத் தொகையினை தற்பொழுது உயர்த்தி வழங்கக் கோரி, ஊடகவியலாளர்கள் சார்பாக அளிக்கப்பட்ட கோரிக்கையினை பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனை ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

6. அரசின் கவனமான பரிசீலினைக்கு பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக கொரோனா நோய்த் தொற்று குறித்த செய்திகளை பல்வேறு சிரமங்களுக்கிடையே சேகரித்து வழங்கும் பத்திரிகை மற்றும் ஊடகத் துறையில் பணிபுரியும் அரசு அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள் (அரசு அங்கீகார அட்டை / செய்தியாளர் அட்டை / மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை போன்ற ஏதேனும் ஒரு வகையில் அரசால் அங்கீகாரம் செய்யப்பட்டவர்கள்) கொரோனா நோய்த் தொற்று காரணமாக இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அரசின் இழப்பீட்டுத் தொகையான ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)ஐ ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆக உயர்த்தி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் அரசு ஆணையிடுகிறது.

7. கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு மறைந்த செய்தியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை பெறுவதற்கு இணைப்பில் கண்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவரின் விசாரணை அறிக்கை மற்றும் பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 23031/CMPRF/2021, நாள் 31.05.2021 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அரசு இணைச் செயலாளர், மற்றும் பொருளாளர்,
நிதி (முதலமைச்சர் பொது நிவாரணநிதி)த்துறை, சென்னை– 9.

<u>நகல்</u>
நிதி (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி)த்துறை, சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
இருப்பு கோப்பு / உபரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்